# முதல் பருவத் தேர்வு – 2022

**9** - ஆம் வகுப்பு **தமிழ்** காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

## பகுதி - I

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6 X 1 = 6

1. தமிழ் விடுதூது ................. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி - அடிகோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

3. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

4. **மல்லல்** மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

**பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

" காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் வெருங்குவளை
கோடெல்லாம் மட அன்னம் குளமெல்லாம் கடல் அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனை ஒவ்வா நலமெல்லாம் "

5. இப்பாடல் இடம்பெற்ற நூல்
அ) தமிழ்விடு தூது ஆ) சீவகசிந்தாமணி இ) பெரியபுராணம் ஈ) சிலப்பதிகாரம்

6. பாடல் அடிகளில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.

## பகுதி - II (மதிப்பெண்கள் : 12) பிரிவு - 1

**குறுகிய விடை தருக. (மூன்று மட்டும்)** 3 X 2 = 6

7. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர்.
ஆ) இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று ச. அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

8. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.

9. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக.

10. தன்வினை, பிறவினை என்றால் என்ன? சான்று தருக.

## பிரிவு - 2

**குறுகிய விடை தருக. (மூன்று மட்டும்)** 3 X 2 = 6

11. கீழ்க்காணும் வினையடிகளை முதல் வினையாகவும், துணைவினையாகவும் அமைத்துத் தொடர்களை உருவாக்குக. அ) வை ஆ) இரு

12. **கலைச்சொல் தருக.** அ) Water Management ஆ) Literature

13. **பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.**
அ) கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.
ஆ) கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

14. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.

அ) இசையின்றி அமையாது பாடல். *(உடன்பாட்டுத் தொடராக)*

ஆ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? *(கட்டளைத் தொடராக)*

## பகுதி - III (மதிப்பெண்கள் : 9)

**III சுருக்கமான விடை தருக. (மூன்று மட்டும்)** 3 X 3 = 9

15. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

16. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

17. `தித்திக்கும் தெள்அமுதாய்' - எனத்தொடங்கும் தமிழ்விடுதூது பாடலை அடிபிறழாமல் எழுதுக.

18. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 15)

**IV எவையேனும் மூன்றுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3 X 5 = 15

19. உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ் இராமகிருஷ்ணனின் "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

20. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



21. **பத்தியைப் படித்து விடையளிக்கவும்.**

உலகின் பழமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று. மொகஞ்சதாரோ - ஹரப்பா அகழாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி எனப்படுகிறது. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர். தமிழ் என்னும் சொல்லிலிருந்துதான் திராவிடா என்னும் சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை கால்டுவெல் எழுதியுள்ளார்.

1. இந்திய நாகரிகம் எத்தகைய நாகரிகங்களுள் ஒன்று?
2. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதியவர் யார்?
3. யார் பேசிய மொழி திராவிட மொழி எனப்படுகிறது?
4. திராவிடா என்னும் சொல் எச்சொல்லில் இருந்து பிறந்தது?
5. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் யார்?

22. **நயம் பாராட்டுக.**

*கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்*
*காடும் செடியும் கடந்து வந்தேன்;*
*எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்*
*இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்*
*ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல*
*ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;*
*ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்*
*ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.*

## பகுதி - V (மதிப்பெண்கள் : 8) 8

23. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க. *(அல்லது)*

24. தண்ணீர் கதையைக் கருப்பொருள் குறையாமல் சுருக்கித் தருக.